சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம்.

*2199. திரு. ஆர். வரதராஜன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதியில் தேவூர்-காவிரிப்பட்டிப் பகுதியில் சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ) : தலைவர் அவர்களே

சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. 1982-ல் பரிசீலனையில் இருந்து, 1983-ஆம் ஆண்டு பார்ட்-2 ஸ்கீம் அடிப்படையில் ஒரு மதிப்பீடு 26 லட்சம் ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு. பிறகு 1985-ஆம் ஆண்டு 28.60 லட்சத்திற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வழங்கப்பட்டு, பிறகு 1-10-1986-ம் தேதி டெண்டர் விடப்பட்டு, அது கான்ட்ராக்டரிடம் ஒப்படைக்கப் பட்டு, 1986—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் வேலையும் தொடங்கப்பட்டு, அதிலே 10 கண்கள் ஆற்றில் கட்டப்படுவதில், 7, 8 கண்கள் கட்டி, பளு தாங்குகின்ற அளவிற்கு முயற்சிக்கப்பட்டு, இணைப்பு சாலைகளுக்கான நில ஆர்ஜிதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேளையில், பாலம் கட்டுவது பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். எனவே. அத்தகைய வேலைகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வரதராஜன் அவர்களுக்கு வினாவிற்கே இடமில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆர். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, சரபுங்கா நதியின் மேற்கு கரை பகுதியில் தனியாருக்குச் சொந்தமான நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமல், இன்று வரையில் அது ஸ்டே வாங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த நிலத்தின் உரிமையாளரைச் சந்தித்து நான் கேட்டபோது, அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்துவிட்டால், ஸ்டேயை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். அதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நிலம் கொடுக்கிறவர்கள் கேட்கிற அளவிற்கு பணத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று நியதி எதுவுமில்லை. அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கேற்ப அரசு அந்த நிலத்தை எடுப்பதற்கு, கையகப்படுத்துவதற்கு பணத்தைக் கொடுக்கும். எனவே. நீதிமன்றத்திற்குப் போய் இருந்தாலும் அது தொடர்பான வழக்கைத் தொடர்ந்து நடத்தி, நிச்சயமாக நிலத்தைக் கையகப்பற்றுகிற வேலையை அரசு மேற்கொள்ளும்.

திரு. சி. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறைக்கு உட்பட்ட சேலம் சர்க்கிள் அல்லது டிவிஷனில் இதுபோன்று நொய்யல் ஆற்றின் மீது எங்கெங்கு பாலம் கட்டப் படுகின்றன ? அதைப்போல ரெயில்வே பாலம் எங்கெங்கு கட்டப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

9-50 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இவ்வளவு அக்கறை உள்ளவர் தனிக் கேள்வி ஒன்று போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

உதவியாளர்கள் நியமனம்.

* 2656. திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மின் இலாகாவினால் நியமிக்கப்படும் உதவியாளர்கள் (Helpers) நியமிக்கப்படும்போது அந்த இலாகாவில் நீண்ட நாட்களாக தினக்கூலியாக வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே. தினக்கூலி ஆட்களை வாரியப் பணிக்கு ஈடுபடுத்தும் முறையினை வாரியம் 1973 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் விலக்கிக் கொண்டுள்ளது. தினக்கூலி முறையில்லாததால், களப்பணியாளராக பணியமர்த்து வதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்ற நிலை எழ வாய்ப்பில்லை.